# தமிழர் பொருண்மியம்

வாரமலர்

TAMILS ECONOMY

விலை - 100/= இதழ் - 102 23.03.2025


# உலக நீர் தினம்

மார்ச் 22



நடுத்தர மற்றும் சுயதொழில் முயற்சிகள்

## இலங்கை பொருளாதாரத்தில் MSME களின் பங்கு

தமிழர் பொருண்மியத்தின் 100வது இதழ் வெளியீடு



# தமிழர்களின் கால்நடைப் பொருளாதாரத்தை கழுத்தறுக்கும் செயல் பரிதவிக்கும் மட்டக்களப்பு பால் பண்ணையாளர்கள்.



"தேனும் தினைமயும் கொலனிப் பகுதியிலே நல்ல பாலும் தயிரும் மண்டூர் பகுதியிலே" என மட்டக்களப்பு மாவட்டத்தின் பல கிராமங்களில் கிராமிய பாடல்களில் பாடுவதுமுண்டு. மக்களின் இந்த கிராமியப் பாடலுக்கு ஏற்றவாறு மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவாங்கரைப் பெருநிலப்பரப்புக்குட்பட்ட பிரதேசம் விவசாயத்திற்கு மாத்திரமின்றி கால்நடை வளப்புகளுக்கும், பெயர்போனதாகும்.

தற்போதும் மேச்சல்தரை இன்மைக்கும் முகம்கொடுத்துக் கொண்டு நூற்றுக்கு மேற்பட்ட கால்நடைகளைக் கொண்டு பெரும் பட்டி பட்டியாக தமது கால்நடைவளர்ப்பில் ஈடுபட்டு வாழ்வாதாரத்தை மேற்கொண்டு வரும் பண்ணையாளர்கள் ஒருபுறமிருக்கின்றார்கள். அதுபோல் தத்தமது வீட்டு வளவுகளிற்குள்ளும், கொட்டகைகள் அமைத்து தமது வீட்டுக் பிள்ளைகளைப்போல் தீனிபோட்டுக் கொண்டு கால்நடைவளர்ப்பிலும் அதிகளவு பண்ணையாளர்கள் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஈடுபட்டு வருவதைக் காணமுடிகின்றது.

மட்டு.மாவட்டம் வருடாந்தம் எதிர்கொள்ளும் வெள்ளப் பெருக்கின்னால் விவசாயச் செய்கை மாத்திரமின்றி, கால்நடை வளர்ப்பும், வருடாந்தம் பெரிதும் பாதிப்புக்குள்ளாகி வருகின்றது. இதனால் வருடாந்தம் மாவட்டத்திலுள்ள கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டுவரும் மக்களின் வாழ்வாதாரம் "சாண்ஏற முழம் சறுக்குவது"போன்று காலத்திற்கு காலம் நலிவடைந்து வருவதாக கால்நடைவர்ப்பில் ஈடுபட்டு தமது வாழ்வாதாரத்திற்குப் போராடி வரும் பண்ணையார்கள் அங்கலாய்க்கின்றனர்.

எமது பிள்ளையார் பாற்பண்ணையில் 475 க்கு மேற்பட்டவர்கள் அங்கத்துவம் வைகிக்கின்றார்கள். ஆனால் தற்போது 65இற்குபட்பட்டவர்கள்தான் பால்கறக்கின்றார்கள். அனைவரும் கடந்த காலங்களில் இருந்து மிகவும் ஆர்வத்துடன் கால்நடை வளர்ப்புக்களில் ஈடுபட்டு வந்தனர். எனினும் இடைப்பட்ட காலங்களில் ஏற்பட்ட பாலுக்கான விலை தளம்பல் காரணமாகவும், கால்நடைகளுக்குரிய தீவனங்களின் விலை உயர்வு காரணமாகவும், பால் உற்பத்தி படிப்படியாக குறைவடைந்துள்ளது. தினமும் எமதுபால் சேகரிப்பு நிலையத்திற்கு

குறைந்தது 500தொடக்கம் 600லீட்டர் பால் நாங்கள் சேகரிப்போம் இப்போது 200தொடக்கம் 220லீட்டர் வரையானபால்தான்எமக்குகிடைக்கப்பெறுகின்றன இந்த அளவிற்குதான் பண்ணையாளர்கள் பால் உற்பத்தியை மேற்கொள்கின்ற நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றோம்.

கால்நடை வளர்ப்புக்காக நாம் பல்வேறு பிரச்சனைகளை எதிர்கொண்டு வருகின்றோம். அந்த வகையில் பசுக்களுக்கான புண்ணாக்கு, தவிடு மோர்லாக், உள்ளிட்ட அனைத்து விதமான கால்நடை உணவுவகைகளும், அதிகளவு விலை உயர்ந்துள்ளன. பசுக்களை வளர்ப்பதற்குரிய இட வசதிகள் பணியாளர்களிடத்தில் இருந்தாலும் அதற்குரிய கொட்டகைகள் பொருத்துவதற்குரிய வசதி வாய்ப்புகள் எமது அங்கத்தவர்களிடத்திலே போதாது உள்ளன. புற்கள் வளர்ப்பதற்குரிய நீர் இறைப்பதற்கான நீர் பம்பிகள், அதற்குரிய நீர்க்குளாய் வசதிகள் இல்லாமல் பல பார்ப் பணையாளர்கள் செயற்பட்டு வருகின்றார்கள். ஒரு சில பண்யாளர்கள் மத்தியில் ஒருசில வசதி களுடனிருந்து தமது கால்நடை வளர்ப்புகளில் ஈடுபட்டு வருகின்றார்கள்தான் ஆனால் அனை வரையும் இதில் உள்ளீற்காவிட்டாலும் வசதி வாய்ப்புகள் இன்றி இன்னலுறுகின்ற பண்ணை யாளர்களே அதிகம்பேர் எமது பிள்ளையார் பாற் பண்ணையாளர் அமைப்பில் இருக்கின்றார்கள்.

வசதி வாய்ப்புகளை அரசாங்கமோ அல்லது அரச சார்பற்ற அமைப்புக்களோ முன்வந்து எமது வழ்வாதாரத்திற்குரிய உதவிகைச் செய்து கொடுக்கும் பட்சத்தில் எதிர்காலத்தில் மேலும் கிராமிய பொருளாதாரம் உயரும்,கால்நடை வளர்ப்பினை ஊக்கப்படுத்தும் பட்சத்தில், கால்நடை உற்பத்திகளும், பரந்த அளவிலும் மேற்கொள் வதற்கும் அவை ஏதுவாக அமையும்.

மட்டு.மாவட்டம் மண்டூர் கணேசபுரம் பகுதியிலே அனுபவம் வாய்ந்த பாற்பண்ணை யாளர்கள் அதிகம்பேர் இருக்கின்றார்கள் அதனை மேற்கொண்டு செல்ல முடியாத அளவிற்கு இவ் வாறான தடைகளும், அமைகின்றன. இவ்வடமும் கடந்தவருட இறுதியிலும் ஏற்பட்ட மழை வெள்ளம் காரணமாக அதிகளவு பாற்பண்ணியாளர்களின் கால்நடைகள் இறக்க வேண்டிய சூழ்நிலைக்கும் தள்ளப்பட்டிருந்தன. மாடுகளை வைத்து பராமரிப் பதற்குரிய வசதிகள் இல்லாமை, அதிக குளிர், போன்றன இவற்றுக்குரிய பிரதான காரணமாகும்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 43 கிராம சேவை உத்தியோகஸ்தர்களை உள்ளடக்கிய மிகப்பெரிய பரந்த நிலப்பரப்பில் காணப்படுவதுதான் எமது போரதீவுப் பற்றுப் பிரதேசமாகும். ஆனால் பிரதேசத்தின் ஒரு பகுதியை மையப்படுத்தியதாகவே துன்பம்கேணியில் எமக்குரிய கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகம் அமைந்துள்ளது. இந் நிலையில் எமது மண்டூர் பகுதியில் இருக்கின்ற பண்ணையாளர்கள் மிக நீண்ட தூரம் பயணித்து, அதிகளவு செலவு செய்துதான் எமது கால்நடை வைத்திய அலுவலகத்தின் சேவைகளை பெற்றுக் கொள்ள நேரிடுகின்றது. அங்கும் ஒரு கால்நடை வைத்தியர்தான் பணியாற்றுகின்றார். இப்பிரதேசத் திற்கு ஒரு கால்நடை வைத்தியர் மாத்திரம் நிர் வகிப்பது அல்லது கண்காணிப்பது என்பது முடியாமல்தான் உள்ளது. காரியாலய உத்தியோ கஸ்தர்களும், வைத்தியரும், சேவைகளை செய் கின்றார்கள் இல்லை என்று சொல்லவில்லை. ஆனால் பிரதேசமெங்கும் ஒரே நேரத்தில் அவர் களால் சேவைகளை விஸ்த்தரிக்க முடியா துள்ளது என்பதை நாம் கருதுகின்றோம். காரணம் எமது பாரிய நிலப்பரப்பும், பரந்த பிரதேசமும், அதிகஅளவு பண்ணையாளர்களைக் கொண்ட பிரதேசம் என்ற காரணத்தினால் ஆகும்.



எனவே நாம் விடுக்கும் வேண்டுகோள் என்னவெனில் எமது மண்டூர் பகுதியையோ அல்லது வெல்லாவெளிக் கிராமத்தை அண்டிய பகுதிகளையோ, இன்னும் ஒரு கால் நடை வைத்திய அதிகாரி அலுவல கத்தை நிறுவும் பட்சத்தில்



எமது பிரதேசத்தைச் சேர்ந்த கால் நடை வளர்ப்பாளர்கள் பெரிது நன்மடைவார்கள். என்பதை நாங்கள் எதிர்பார்க்கின்றோம். ஒரே ஒரு கால்நடை வைத்தியரைவைத்துக்கொண்டு ஆயிரக் கணக்கான கால்நடைகளை கண்காணிப்பது அல்லது அவற்றுக்கு சிகிச்சை அளிப்பது என்பது முடியாமல் இருப்ப தாகவே நாங்கள் கருதுகின் றோம். எனவே குறைந்தது இரு கால்நடை வைத்தியர்களையாவது நியமிப்பதற்கு உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் வேண்டு கோள் விடுகின்றோம்.

அன்னையில் எமது சக பண்ணையாளர் ஒருவருடைய பசு கன்று போடுவதற்கு மிகவும் அவஸ்தை பட்டிருந்தது. அந்த நிலையில் எமது பிரதேசத்தின் சேர்ந்த கால்நடை வைத்தியருக்கு நாங்கள் தொடர்பு கொண்ட போது கால்நடை வைத்தியரும் சுகவீனமடைந்து வைத்தியசாலைக்கு சென்றிருந்தார். எனினும் நாம் வேறு பிரதேசத்தில் இருந்து வேறொரு வைத்தியரை அணுகி அவரைக் கொண்டு வந்து உரிய பசுவுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. பசுவின் வயிற்றில் இருந்த கன்றுக்குட்டியை வெளியே எடுத்தோம் ஆனாலும் அந்த கன்றுக்குட்டி இறந்துவிட்டது. இதனால் பண்ணையாளர் வெகுவாகவும் மனமடைந்திருக் கின்றார். இந்த சம்பவங்கள் இனிமேலும் இடம் பெறக்கூடாது கால்நடை பராமரிப்பு மேற் கொள்வதில் பல்வேறு சிரமங்களை நாங்கள் எதிர்கொண்டு வருகின்றோம் பராமரிக்கும் பொறி முறைகளில் பிரச்சனைகள் இருக்கின்றன.

இது இவ்வாறு இருக்க பாலுக்கான நிர்ணய விலை இன்னும் இல்லாமல் உள்ளது 160ரூபா ஒரு லிட்டர் பாலுக்கான பெறுமதி எமக்கு கிடைக்கிறது. குறைந்தது ஒரு லிட்டர் பாலுக்கு எமக்கு 200 ரூபாயாவது கிடைக்குமாக இருந்தால் ஓரளவு எமது பண்ணையாளர்கள் வாழ்வாதாரத்தை ஈடு செய்ய முடியும். என நான் நினைக்கின்றேன். பாலுக்கு அரசாங்கம் 200 ரூபாயாக விலையை உயர்த்தினாலும் கால்நடைகளுக்குரிய தீவனங் களுக்குரிய விலையையும் உரிய தீவனங்களை விற்பனை செய்யும் நிறுவனங்களும் உயர்த்திவிடும் இவ்வாறான விலை தளம்பல்களும் இருக்கின்றன. இவ்வாறான நிலையில் தான் எமது பண்ணை யாளர்கள் தமது வாழ்வாதாரத் தொழிலான கால் நடை வளர்ப்பில் இதுவரைக்கும் ஈடுபட்டு வருகின் றார்கள்.

இவ்வாறு பல காரணங்கள் அமைகின்ற காரணத்தினால்தான் பால் உற்பத்தியானது படிப் படியாக குறைந்து கொண்டு செல்கின்றன. இவ்வாறான விடயங்களை சம்பந்தப்பட்ட தரப்பினர் இனம் காணவேண்டும். அதற்குரிய முடிவுகள் எடுக்க வேண்டும். இதனை அவ்வாறு நிவர்த்தி செய்யப்படும்பட்சத்தில்தான் பண்ணையாளர்களின் வாழ்வாதாரமும் நீடித்து நிலைக்கும்.

இலங்கையை பொறுத்தவரையில் பண்ணை யாளர் மத்தியில் காணப்படும் இவ்வாறாக பிரச் சனைகளுக்கு தீர்வு காணும் பட்சத்தில் பால் உற்பத்தி அதிக உச்சத்தில் இருக்கும் என நாம் நம்புகின்றோம். குறிப்பாக எமது பிரதேசத்தை பொறுத்தவரைக்கும் பாலுற்பத்தி மிகவும் அதிகரிப் பதற்குரிய சாத்தியக்கூறுகள் இவ்வாறு பிரச்சனை களுக்கு தீர்வு காணும் பட்சத்தில் அமையும் என நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.

பால்லுற்பத்தியை அதிகரித்து பாலுற்பத்தி கிராமமாக முற்று முழுதாக இந்த கிராமத்தை மாற்றுவதற்கு இவ்வாறான விடயங்களுக்கு சம்பந்தப்பட்ட தரப்பினர் தீர்வு கண்டுதர வேண்டும் நாம் வேண்டுகோள் விடுகின்றோம். என பிள்ளையார் பாற்பண்ணையாளர் சங்கத்தின் உறுப்பினர் கோணேஸ் தெரிவிக்கின்றார்.நாங்கள் மிக நீண்ட காலமாக வீட்டிலேயே வைத்து பசுக்களை வளர்த்து வருகின்றோம். இதுவரைக்கும் என்னிடம் மூன்று கறவை பசுக்கள் உள்ளன. ஆனாலும் பசுக்களை வீட்டில் கட்டி வளர்ப்பதற்குரிய மாட்டுக்கு உரிய கொட்டகைகள் இல்லாமல் உள்ளது.

கொட்டகைகள் அமைக்குமாறும் பலர் கூறினார்கள் அரசாங்க தரப்பில் இருந்தும் எனக்கு கூறப்பட்டது. ஆனால் நாங்கள் மாட்டு கொட்டகை ஒன்று அமைத்தோம், எனினும் தரைக்கு சிமெண்ட் போடுவதற்கும், குடிநீர் வசதி மற்றும் உணவுகளை சேமித்து வைப்பதற்குரிய வசதிகளும் இல்லாமல் உள்ளன. இந்த நிலையில் மாடுகளை மர நிழலில்தான் நாங்கள் கட்டி வைக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டிருக்கின்றோம். நிலத்திலே பசுக்களை கட்டி வளர்ப்பதனால் இரண்டு மாடுகளின் காலிலேயே கிருமி தொற்றுகள் காரணமாக நோய் ஏற்பட்டுள்ளது.

மாடுகளுக்குரிய தீவனமான ஒருகிலோ தவிடு 90ரூபாய், பருப்பு அனைத்தும் அதிக விலையாக உள்ளன, ஒருலோட் வைக்கோல் 12,000 ரூபாய் இந்த நிலையில் 160 ரூபாவிற்கு பால் ஒரு லீற்றர் கிடைப்பது என்பது போதாது குறைந்தது. ஒரு லீற்றர் பாலுக்கு 200 ரூபாயாவது கிடைத்தால்தான் ஒரளவு கட்டுப்படியாகும். பாலுக்குரிய விலையை உயர்த்தி கால்நடைகளுக்குரிய தீவனங்களுக்குரிய விலையை குறைக்க வேண்டும் என மண்டூர் பகுதியில் கால்நடை வளர்க்கும் கிருஸ்ணபிள்ளை வீரலெட்சுமி தெரிவிக்கின்றார்.

நாம் தற்போது தினமும் 10 லிட்டர் பால் உற்பத்தி செய்து பண்ணையிலேயே கொடுத்துதான் லிட்டருக்கு 160 வீதம் எமக்கு பணம் கிடைக்கப் பெறுகின்றது. மாறாக பால் சார்ந்த உற்பத்தி பொருட்களைச், செய்வதற்குரிய பயிற்சிகள் எனக்கு இல்லை, அவ்வாறான பயிற்சிகளை எமக்கு வழங்குகின்றபோது அது தொடர்பான உற்பத்தி நிலையங்களை அமைத்து பால் உற்பத்தியில் மேலதிகமான பால்சார்ந்த உணவுப் பொருட்கள், வெண்ணெய் தயாரித்தல், நெய் எடுத்தல், யோக்கட் செய்தல், போன்ற போன்ற பயிற்சிகளை எமக்கு வழங்கப்படும்போது அது தொடர்பான மேலதிக வருமானங்களையும் நாங்கள் ஈட்ட டியும் என்று நான் எதிர்பார்க்கின்றோம்.



இதுபோல் எமது பகுதியில் கல்வி கற்று வேலைவாய்ப்ற்றிருக்கும் இளைஞர் யுவதிகளையும் இவ்வாறான விடயங்களில் ஈடுபடுத்தி தொழில் வாய்ப்புகளையும் ஏற்படுத்திக் கொடுக்கலாம். என நாம் எதிர்பார்க்கின்றோம் எனத் தெரிவிக்கின்றார் மற்றுமொரு கால்நடைவளர்பாளரான தில்லை நாயகி.

இவர்களின் கருத்துக்கள் இவ்வாறு அமைகின்றபோது போரதீவுப்பற்று பிரதேசத் திலுள்ள கால்நடைகளைக் கவனிக்கும் தும்பங் கேணியில் அமைந்துள்ள கால்நடை வைத்திய அலுவலகத்தின் தகவல்களின்படி இதுவரையில் 6780 கால்நடைவளர்ப்பாளர்கள் உள்ளதாகவும், கடந்த வருடத்தின் இறுதியிலும் இவ்வருட ஆரம் பதிலும் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் 77 பசுக் களும், 30 எருமைகளும், 34 ஆடுகளும் காணாமல் போயுள்ளதாக தம்மிடம் பண்ணையாளர்கள் பதிவு செய்யுள்ளதாக தெரியவருகின்றது. மில்கோ பால் சேகரிப்பு நிறுவனத்தை தனியாருக்கு வழங்க வுள்ளதாகத் தெரிவித்து பாற் பண்ணையாளர்கள் கடந்த வருடம் 16.07.2024 அன்று அப்பகுதி பண்ணை யாளர்கள. ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டிருந்தனர்.

நாடு படிப்படியாக முன்னேற்றம் காண வேண்டுமாக இருந்தால் ஆத சகல துறைகளையும் தொட்டுச்செல்லவேண்டும். அடிப்படையில் கிராமிய பொருளாதாரம் கட்டியெழுப்பப்படல் வேண்டும் அல்லவா. அதற்கு மட்டக்களப்பு மாவட்டமும் விதிவிலக்கல்ல. அற்காக போரதீவுப் பற்றுப் பிரதேசம் ஒரு சிறு உதாரணம் மாத்திரமே அதபோல் மாவட்டத்தில் அமைந்துள்ள 14 பிரதே செயலாளல் பிரிவுகளிலும் இவ்வாறு மக்கள் தத்தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்குரிய தொழிலாக கால்நடைவளர்ப்பை மேற்கொண்டு வருகின்றனர். என அத்துறைசார்ந்த பால்பதனிடும் பயிற்சிகளையும், பாலுக்கான விலை அதிகரிப்பு, கால்நடைகளின் தீவனங்களின் விலைக்குறைப்பு போன்ற பல விடைங்களைக் கருத்திற் கொண்டு இவ்வாறான பண்ணையாளர்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்கு உறுதுணை வழங்கும் பட்சத்தில் காலப்போக்கில் வறுமையும் குறைவடைந்து நாட்டியின் அபிவிருத்திக்கு அது வித்திடும் என்றால் அதனை மறுக்க முடியாது.



வ.சக்தி
சமூக ஆய்வாளர்



# பார்வை

"காடுவெட்டிக் கட்டையானது பிடுங்கி..
கனத்ததோர் மண்வெட்டி
கையிலெடுத்து
பாடுபட்டே உழுது வன்நெல்
விதைக்கவும்
கேடுகெட்ட பண்டி விளைவதை
அழிக்கவும்
கூடுமோ சொல்லரியநர் சிங்க
நாயகமே"

தமிழர் தமது வாழ்வியலின் முக்கிய கூறாக இசையை கொண்டுள்ளனர். இசையில்லாத வாழ்வு இசைவில்லாத வாழ்க்கை, தொட்டில் பழக்கம் சுடுகாடுமட்டும் என்று இதை சொல்வார்கள். அதாவது குழந்தை பிறந்த போது அதை தூங்க வைக்க தொட்டிலில் இட்டுப் பாடுவது தாலாட்டு. அதனைத்தொடந்து குழந்தையின் ஒவ்வொரு வளர்ச்சியும் நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக இருக்கும். அதன் வளர்ச்சிக்கேற்ப பாடலும் மாறுபடும். வளரும். ஆக அவர்களது பாடலில் வருவதெல்லாம் அவர்களால் அனுபவத்தில் கண்டறியக்கூடிய தெரிந்த பொருட்களும் விடயங்களுமே பாடு பொருளாக இருப்பதுண்டு. அவர்களது கதைகளில் வரும் இளவரசர்கள் அவன் அனுபவிக்கும் வசதிகள் அனைத்துமே தனது குழந்தைக்கும் சொந்தமானது என பாடுவார்கள். அது பிள்ளை வளர்ப்பு.

விவசாயிகள் பயிர்வளர்க்க பாடுவதை அறிவீர்களா? அவன் தனது பயிரை ஆண்டவனுக்கு காணிக்கையாகவே படைக்கிறான். எனவே அருமையான சிந்துகளை வயலில் பாடி வாழ்த்துவான். இப்போதுள்ள நவீன காலம் போல் இல்லாமல் முற்காலத்தே வன விலங்குகளின் ஆக்கிரமிப்பு அதிகம். சிறுபறவைகளுக்கும் வன விலங்குகளுக்கும் பகிர்ந்து கொடுத்து விட்டு மீதமானதைத்தான் தனது வீட்டுக்கு எடுத்துச் செல்கிறான். வருங்காலத்தில் பறவைகளின் தாக்கம் இப்போது இருப்பது போலல்லாமல் குறையலாம் ஆனால் விலங்குகள் குறிப்பாக பன்றி குரங்கு இவற்றின் பெருக்கம் நாடளாவிய ரீதியில் மிக மிக அதிகரித்துள்ளன. குரங்கு பருவத்தில் ஒரு குட்டி ஈனும். ஆனால் பன்றி ஒரு பருவத்தில் பதினாறு குட்டிகளை ஈன வல்லது. எனவே அதன் இனப்பெருக்கம் அளவிடமுடியாத அளவு பெருகியுள்ளது. இந்தப்பன்றிகளின் வாழ்க்கை மிக அருமையாக சித்தரிக்கப்பட்டிருப்பது வன்னி நாட்டார் பாடல்களில்.

மனிதர்களின் வாழ்க்கைமுறைகளைப்போலவே பன்றிகளையும் கணவன் மனைவி பிள்ளைகளாக உருவகித்து பாடப்பெற்றுள்ள சிந்கு அரிவிவெட்டுச் சிந்து எனப்படும். அரிவி வெட்டே இல்லாத இயந்திர மயமான இந்தக்காலத்தில் எமது முன்னோர் எவ்வளவு அழகான இன்பமான வாழ்க்கையை வாழ்ந்தார்கள் என்பதை அறிய வியப்பாக மட்டுமன்றி, மகிழ்ச்சியாகவும் உள்ளது. இன்றைய கவிஞர்களுக்கு இருக்கும் பாடுபொருள் அதாவது கரு, பெண், நிலவு, காதல்,



வாழ்வு என இருக்க, நம் முன்னோர் பாடுவதற்கும் வாழ்வதற்கும் தமது சூழலிலிருந்தே விடயங்களைப்பெற்று மகிழ்ந்துள்ளனர். இன்றைய இளைஞர்களுக்கு இவை தெரிய வாய்ப்பே இல்லாமல் நமது அரிய பொருள்களுடன் கலைகளும் வாழ்வியலும் கூட கரைந்து மறைந்து போகிறது.

இன்றைய இந்த கட்டுரையின் ஆரம்பம், நரசிங்கன் சிந்து எனப்படும். பாடலின் அடிகள் இப்படியே விறுமன்சிந்து, வைரவர் சிந்து, முறிகண்டியான் சிந்து. குருவிச்சிந்து குருவிப்பள்ளு பன்றிப்பள்ளு என ஏராளமான வகையான பாடல்கள் உண்டு தொட்டிலில் தொடங்கும் நாட்டார் பாடல்களில் இவை தொழிற்பாடல்களாகி விளங்க தொடர்ந்து சடங்குகள், விழாக்கள் விளையாட்டுகள் வழிபாடுகள் என வளர்ந்து மனிதனின் முடிவில் ஒப்பாரியாகி முடிகிறது. இதுதான் சுடுகாடுவரை செல்லும் பாடல்.

நாம் பன்றிப்பள்ளின் சுவையான சில பாடல் வரிகளை பார்வையிடலாம். விளைந்த தரைக்குள் விவசாயி நுழையும் போது, அக்கால நெல், தலைகுனிந்து வணங்கி வரவேற்கிறதாம். அதாவது கதிரின் கனத்தால் அது தலையை சவட்டிக்கொண்டு நிற்பது, விவசாயிக்கான வணக்கமாக தெரிகிறது. இன்னுமொரு கவிஞன் வளர்ந்து விட்ட பருவப்பெண்போல் உனக்கு வெட்கமா தலை வளைந்து சும்மா பார்க்கிறியே தரையின் பக்கமா? இது வளர்த்துவிட்ட தாய்க்குத்தரும் ஆசை முத்தமா? என் மனைக்கு வர காத்திருக்கும் நீயும் சொல்லம்மா? ஏன்று பாடியுள்ளான். நெல்விளைந்திருப்பதை பன்றிகள் எப்படி அறிகின்றன. ஆமாம் அவை வனத்தில் அலைந்து கண்ட கண்ட கிழங்குகளை கிண்டித்தின்று அலுத்துப்போய் மர நிழலில் படுத்து உறங்குகின்றன. பன்றிகளின் தலைச்சன் அதன் மனைவிப்பன்றி பிள்ளைகள் உறவினர்கள் என சுற்றம் சூழ உறங்கிக் கொண்டிருக்க, மனைவிப்பன்றியானது திடீரென்று ஒரு கனவு கண்டு பயந்து அரண்டு எழுந்து விடுகிறது. இதைக்கண்ட தலைச்சன். தன் மனைவியிடம் என்னவெனக் கேட்க, அது தான் கண்ட கனவை கூறுகிறது. வுானத்திலிருந்து பெருமழை பொழிகிறது. கானகத்திலிருந்து மயிலும் கிளிகளும் புறாவும் தமக்குள் சண்டையிட்டுக்கூச்சல் போடுகின்றன. நான் பயந்தேன் என்கிறாள். அதை ஆண்பன்றியாகிய தலைச்சன் சொல்கிறது .

“ வானிலிருந்து மழைகள்பொழிய மாரிவெள்ளம் பெருகவும்.
கானிலிருந்து மயிலும்குயிலும் கடிபட்டொருசொற்கூறவும்,
தேனிலினிய மனைவி அருண்டு திடுக்கிட்டெழுந்து
என்னிடம் தேர்ந்திடப்பொருள் கூறினேன்”

மனிதர்கள் கனவு காண்பதுண்டு விலங்குகளும் பறவைகளும் ஏன் இன்றுதான் பிறந்த குழந்தைக்கும் கனவு வரும். பன்றிக்கும் அவ்வாறே கனவு வந்தது. மனிதர்கள் கனவுக்கு பலன் பார்ப்பார்கள். கனவுகளுக்கு பலன் கூறும் திறமைசாலிகள் எமது மண்ணில் இருக்கிறார்கள். அவர்களிடம் ஓடிப்போய் கனவைச் சொல்லி பலன்கேட்கும் மக்களும் உண்டு. எனவே பன்றிப்பள்ளை ஆக்கிய புலவனும் பலனைக்கூற பன்றி தயாரனதாக சொல்கிறான். பலன் என்னவோ?

“கன்னல் சொரியும் செந்நெல் விளையும் காலமென்றறிவாயடி.
சின்னப்பிழைப்பைப் போட்டு மானிடர் நாட்டில் சென்றிடலாமடி
மண்ணில் நமது கண்ணுக்கினிய மக்களைத்துரந்தழையடி
வன்னவயலில் செல்லப்பயிரில் நெல்லருந்திடலாமடி” விவசாயிகளின் அருமையான பாடல் காட்டும் திறமைகளை தொடர்ந்து ரசிப்போம் .



தமிழ்க்கவி
சாகித்திய எழுத்தாளர்

# உலக நீர் தினம் 2025

## பனிப்பாறை பாதுகாப்புக்கான அவசர அழைப்பும் நன்னீர் மேலாண்மையும்



**இன்றைய சூழலில் கோடைக் காலத்தில் மட்டும் மனிதர்களுக்குத் தண்ணீர்ப் பற்றாக் குறை ஏற்படுவதில்லை. மழை பொய்த்துப் போனால் எல்லாக் காலத்திலும் தண்ணீர்ப் பற்றாக்குறை ஏற்படுவதைத் தவிர்க்க முடிவதில்லை. உலக அளவில் இன்று 5இல் ஒரு குழந்தை தண்ணீர்ப் பற்றாக்குறையால் அவதிப்படுகிறது.**

**ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 22 அன்று, உலக நீர் தினம் நன்னீர் பாதுகாப்பு மற்றும் நிலையான மேலாண்மையின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டும் வகையில் அனுசரிக்கப்படுகிறது.**

2025 ஆம் ஆண்டில், இந்த நிகழ்வு அதன் 32 வது ஆண்டு நிறைவைக் குறிக்கிறது. பனிப்பாறை பாதுகாப்பு என்ற கருப்பொருளுடன், இந்த ஆண்டுக்கான உலக நீர் தினம் உலகளாவிய நீர் பாதுகாப்பு மற்றும் காலநிலை நிலைத்தன்மையில் பனிப்பாறைகள் வகிக்கும் முக்கிய பங்கை வலியுறுத்துகிறது.

பனிப்பாறைகள் இயற்கை நீர்த்தேக்கங்களாக செயல்படுகின்றன. படிப்படியாக ஆறுகள் மற்றும் ஏரிகளில் நன்னீரை வெளியிடுகின்றன. இதன் மூலம் உலகளவில் மில்லியன் கணக்கான மக்களுக்கு உதவுகின்றன. அவை உலகளாவிய வெப்பநிலையையும் ஒழுங்குபடுத்துகின்றன மற்றும் வானிலை முறைகளை சரிப்படுத்துகின்றன.

### உலக வெப்பநிலை அதிகரிப்பால் பனிப்பாறை உருகுதல்

- இருப்பினும், அதிகரித்து வரும் உலக வெப்பநிலை பனிப்பாறை உருகுவதை துரிதப்படுத்தியுள்ளது.
- நன்னீர் கிடைக்கும் தன்மை குறைதல், கடல் மட்டங்கள் உயர்வு மற்றும் அதிகரித்த காலநிலை உறுதியற்ற தன்மை போன்ற கடுமையான அபாயங்களை ஏற்படுத்தியுள்ளது.
- இமயமலைப் பகுதியில் 16,627 க்கும் மேற்பட்ட பனிப்பாறைகளைக் கொண்ட இந்தியா, கங்கை, பிரம்மபுத்திரா மற்றும் சிந்து போன்ற முக்கிய நதி அமைப்புகளை அச்சுறுத்தும் ஆபத்தான பனிப்பாறை குறைவை எதிர்கொள்கிறது.
- அவசர தலையீடு இல்லாவிட்டால், நீர் பாதுகாப்பு, விவசாயம் மற்றும் எரிசக்தி உற்பத்தி கடுமையாக பாதிக்கப்படலாம்.

- *கார்பன் வெளியேற்றத்தைக் குறைத்தல், நிலையான நீர் மேலாண்மை நடைமுறைகளை ஏற்றுக்கொள்வது மற்றும் பனிப்பாறை பாதுகாப்பிற்கான உலகளாவிய ஒத்துழைப்பை மேம்படுத்துதல் உள்ளிட்ட உடனடி நடவடிக்கைகளின் அவசியத்தை நிபுணர்கள் வலியுறுத்து கின்றனர்.*

- *அரசாங்கங்கள், தொழில்கள் மற்றும் சமூகங்கள் காலநிலை மீள்தன்மையை கொள்கைகளில் ஒருங்கிணைத்து பொறுப்பான நீர் மேலாண்மையை ஊக்குவிக்க ஒத்துழைக்க வேண்டும்.*

- *2025 ஆம் ஆண்டு உலக நீர் தினத்தை உலகம் அனுசரிக்கும் வேளையில், பனிப்பாறைகளைப் பாதுகாக்கவும், காலநிலை மாற்றத்தை எதிர்த்துப் போராடவும், எதிர்கால சந்ததியினருக்கு நீண்டகால நீர் பாதுகாப்பை உறுதி செய்யவும் அவசர நடவடிக்கைகள் தேவை என்பதை நினைவூட்டுவதாக இது செயல்படுகிறது.*

*'நீரின்றி அமையாது உலகு' என்றார் வள்ளுவர். மனிதனின் அடிப்படைத் தேவையில் உணவு, உடை, உறைவிடம் முதன்மையானது. இதில் உணவு தயாரிக்கத் தேவையான உயிர் திரவம் நீர்தான். மனிதர்களுக்கு மட்டுமல்ல, பூமியில் வாழும் அனைத்து உயிரினங்களும் உயிர் வாழ சுத்தமான நீர் மிகவும் அவசியம். நீரின் தேவை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. அதேபோல நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தும் தேவையும் அதிகரித்திருக்கிறது. நீரின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி 1992ஆம் ஆண்டில் பிரேசிலின் ரியோடி ஜெனிரோவில் நடைபெற்ற சுற்றுச்சூழல் மற்றும் வளர்ச்சிக் கான ஐக்கிய நாடுகள் சபை மாநாட்டில் 'உலக நீர் நாளு'க்கான விதை இடப்பட்டது.*

*நீரின் மகத்துவத்தையும் அதன் அவசியத்தையும் உலக மக்கள் அனைவரும் அறிந்துகொள்வதற்காக அந்த மாநாட்டில் 'உலக நீர் நாள்' என்கிற கருத்தாக்கம் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இதையடுத்து 1993 மார்ச் 22 முதல் 'உலக நீர் நாள்' கொண்டாடப்பட்டு வருகிறது. அது ஏன் மார்ச் 22 ஏனெனில் மார்ச் 21 'உலகக் காடுகள் நாள்' கொண்டாடப்படுகிறது. அதை மனதில் கொண்டே மார்ச் 22 'உலக நீர் நாள்' கொண்டாட முடிவானது. இயற்கையின் அருங்கொடைகளில் காடும் நீரும் ஒன்றோடு மற்றொன்று கலந்தது. இன்று பல்வேறு நதிகளில் பாய்ந்துகொண்டிருக்கும் நீர், காடுகள் வழியாகப் பயணித்துத்தான் நதியைச் சென்றடைகிறது!*

*இன்றைய சூழலில் கோடைக் காலத்தில் மட்டும் மனிதர்களுக்குத் தண்ணீர்ப் பற்றாக் குறை ஏற்படுவதில்லை. மழை பொய்த்துப் போனால் எல்லாக் காலத்திலும் தண்ணீர்ப் பற்றாக்குறை ஏற்படுவதைத் தவிர்க்க முடிவதில்லை. உலக அளவில் இன்று 5இல் ஒரு குழந்தை தண்ணீர்ப் பற்றாக்குறையால் அவதிப்படுகிறது.*

*ஆசியாவில் 15.5 கோடிக் குழந்தைகள் தண்ணீர் பற்றாக்குறையால் அவதிப்படுகின்றனர் என்கின்றன தரவுகள். மனித இனம் எதிர்கொள்ளும் அபாயமாக இது உருவாகி வருகிறது. 2050க்குள் உலகில் 570 கோடிப் பேர் ஓராண்டில் ஒரு மாதம் தண்ணீர் பற்றாக்குறையை எதிர்கொள்ள நேரிடும் என்று ஐக்கிய நாடுகள் சபை எச்சரித்துள்ளது.*

*எனவே, தண்ணீரை வீணாக் காமல் சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டிய தருணம் இது. தண்ணீர் கிடைக்கும்போது அதைச் சேமித்து வைத்துக் கொள்ள வேண்டும். நம் வீட்டருகே உள்ள நீர் நிலைகளை மாசுபடுத்தாமல் அதில் தூய்மையான தண்ணீர் சேருவதை மனிதர்களாகிய நாம்தான் உறுதிசெய்ய வேண்டும். அது நிலத்தடி நீர் உயரவும் வழிவகுக்கும்.*





அமுதன்
கீரிமலை



# கிணறுகள் ஏன் வட்டமாக இருக்கிறது தெரியுமா..?

**முன்னோர்கள் காலம் தொட்டு கிணறுகள் தோண்டப்பட்டு தண்ணீர் சேகரிக்கப்பட்டது. மேலும், கிராமங்களிலும் நகரங்களிலும் கூட பல பழைய வீடுகளில் கிணறுகளை இன்றும் காணலாம். இந்தக் கிணறுகள் எப்போதும் கோள வடிவில் இருப்பதை நீங்கள் கவனித்திருப்பீர்கள்.**

*பின்னணியில் இப்படி ஒரு அறிவியல் காரணமா?*

*கிணறு ஏன் சதுரமாகவோ, முக்கோணமாகவோ அல்லது அறுகோண மாகவோ இல்லை என்று நீங்கள் எப்போதாவது யோசித்திருக்கிறீர்களா?*

*கிணறுகள் ஏன் வட்டமாக மட்டுமே உள்ளன தெரியுமா..?*
*இதுதான் காரணம்..!*

*கிணறுகள் ஏன் வட்டமாக மட்டுமே உள்ளன தெரியுமா..?*
*இதுதான் காரணம்..!*

*கிணறு ஏன் சதுரமாகவோ, முக்கோணமாகவோ அல்லது அறுகோணமாகவோ இல்லை என்று நீங்கள் எப்போதாவது யோசித்திருக்கிறீர்களா?*

*நீங்கள் கிணறுகளை பல முறை, பல இடங்களில் பார்த்திருப்பீர்கள். ஆனால், உலகம் முழுவதும் கட்டப்பட்ட கிணறுகள் வட்ட வடிவில் மட்டுமே இருப்பது ஏன் தெரியுமா? இந்தக் கிணறுகள் ஏன் சதுரமாகவோ அல்லது முக்கோணமாகவோ அல்லது வேறு வடிவமாகவோ இல்லை?*

*நீங்கள் கிணறுகளை பல முறை, பல இடங்களில் பார்த்திருப்பீர்கள். ஆனால், உலகம் முழுவதும் கட்டப்பட்ட கிணறுகள் வட்ட வடிவில் மட்டுமே இருப்பது ஏன் தெரியுமா? இந்தக் கிணறுகள் ஏன் சதுரமாகவோ அல்லது முக்கோணமாகவோ அல்லது வேறு வடிவமாகவோ இல்லை?*



முன்னோர்கள் காலம் தொட்டு கிணறுகள் தோண்டப்பட்டு தண்ணீர் சேகரிக்கப்பட்டது. மேலும், கிராமங்களிலும் நகரங்களிலும் கூட பல பழைய வீடுகளில் கிணறுகளை இன்றும் காணலாம். இந்தக் கிணறுகள் எப்போதும் கோள வடிவில் இருப்பதை நீங்கள் கவனித்திருப்பீர்கள்.

ஆனால் கிணறு ஏன் சதுரமாகவோ, முக்கோண மாகவோ அல்லது அறுகோணமாகவோ இல்லை என்று நீங்கள் எப்போதாவது யோசித்திருக்கிறீர்களா?

உண்மையில், கிணற்றின் வட்ட வடிவத்திற்குப் பின்னால் ஒரு ஆச்சரியமான காரணம் இருக்கிறது. இதற்கு பின் மிகப்பெரிய அறிவியல் காரணமும் உள்ளது. இன்று இந்த கட்டுரையில் அந்த இரகசியத்தை தெரிந்துகொள்வோம்.




சுற்று கிணறுகளுக்குப் பின்னால் உள்ள மிகப்பெரிய காரணம் இதுதான்: வட்டக் கிணறுகள் மிகவும் வலிமையான அடித்தளத்தை கொண்டது. இதற்கு மிகப் பெரிய காரணம், ஒரு வட்டக் கிணற்றில் மூலைகள் இல்லாததால் இது கிணற்றைச் சுற்றியுள்ள நீரின் அழுத்தத்தை சமமாக வைத்திருக்கும்.



அதேசமயம், கிணறு வட்டமாக இல்லாமல் சதுரமாக இருந்தால், நான்கு மூலைகளிலும் தண்ணீர் அழுத்தம் இருக்கும். இதனால் கிணறு நீண்ட காலம் நீடிக்காது. கூடுதலாக, சரிவு அபாயமும் கணிசமாக அதிகரிக்கும். இதனால்தான் உலகம் முழுவதும் கிணறுகள் வட்ட வடிவில் உருவாக்கப்படுகின்றன.

கிணற்றை அசுத்தப்படுத்த முடியாது: கிணறுகள் தலைமுறைகள் தாண்டி இருப்பதற்கு காரணமும் வட்ட வடிவில் இருப்பதால்தான். அதாவது ஒரு வட்டக் கிணற்றில் சீரான அழுத்தம் இருப்பதால், மண் சரிவதற்கான வாய்ப்பு மிகக் குறைவு.

கிணற்றை அசுத்தப்படுத்த முடியாது: கிணறுகள் தலைமுறைகள் தாண்டி இருப்பதற்கு காரணமும் வட்ட வடிவில் இருப்பதால்தான். அதாவது ஒரு வட்டக் கிணற்றில் சீரான அழுத்தம் இருப்பதால், மண் சரிவதற்கான வாய்ப்பு மிகக் குறைவு.



கிணறு வட்டமாக இருந்தால் அதன் வடிவம் எளிதானது: கிணறு வட்டமாக இருப்பதற்கு மற்றொரு காரணம், சதுர அல்லது முக்கோண கிணற்றை விட வட்டமான கிணற்றை வடி வமைக்க மிகவும் எளிதானது. ஏனெனில் கிணறு என்பது பொதுவாக தோண்டுவதன் மூலம் உருவாக் கப்படுகிறது மற்றும் வட்ட வடிவில் தோண்டுவதன் மூலம் கிணறு செய்வது மிகவும் எளிதானது என்பதும் ஒரு காரணம். இப்போது புரிகிறதா.. ஏன் கிணறுகள் வட்ட வடிவில் மட்டுமே உள்ளன என்று..?

ஆனதி

# தமிழர் பொருண்மியத்தின் 100வது சிறப்பிதழ் வெளியீடும் இதழின் முதல்











# ஆசிரியர் திரு. பாரதி ராஜநாயகம் அவர்களின் நினைவேந்தல் நிகழ்வும்.






















# இலங்கையின் பொருளாதாரத்தை புத்துயிர் பெறச்செய்தல்:

## வளர்ச்சியை மேம்படுத்துவதில் MSME களின் பங்கு

Revitalizing Sri Lanka’s Economy: The Role of MSMEs in Driving Growth

உலகளாவிய பின்னடைவு, உள்நாட்டு நிதி அழுத்தங்கள் மற்றும் கட்டமைப்பு சீர்திருத்தங்களின் தேவை ஆகியவற்றிலிருந்து உருவாகும் சவால்களை எதிர்கொள்ளும் இலங்கை தனது பொருளாதார பயணத்தில் ஒரு முக்கியமான கட்டத்தில் நிற்கின்றது. இந்த சூழ்நிலையில், நுண்பாக, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் (MSME) பொருளாதாரத்தை புத்துயிர் அளிப்பதில் முக்கிய சக்தியாக உருவாகின்றன. வேலைவாய்ப்பை உருவாக்குவதற்கும், வறுமையைக் குறைப்பதற்கும், புதுமைகளை உருவாக்குவதற்கும், MSMEகள் பொருளாதார மீட்சியின் முதுகெலும்பாக செயல்பட முடியும். எவ்வாறாயினும், ஒவ்வொன்றினதும் முழு திறனை உணர்ந்துகொள்வதற்கு உள்ளார்ந்த சவால்களை எதிர்கொள்வது மற்றும் இலக்கு கொள்கை சீர்திருத்தங்களை செயல்படுத்துவது அவசியம்.

### பொருளாதார மீட்சியில் MSMEகளின் பங்கு

#### 1. வேலைவாய்ப்பு உருவாக்கம்

MSMEகள் இயல்பிலேயே உழைப்பு மிகுந்தவை, நகர்ப்புற மற்றும் கிராமப்புறங்களில் வேலை வாய்ப்புகளை வழங்குகின்றன. குறிப்பாக இளைஞர்கள் மற்றும் பெண்கள் மத்தியில் வேலையின்மை மற்றும் குறைந்த வேலை போன்ற பிரச்சனைகளை கொண்டிருக்கும் இலங்கை போன்ற ஒரு நாட்டில், MSMEகள் சாத்தியமான தீர்வை வழங்குகின்றன. தொழில்முனைவை வளர்ப்பதன் மூலமும், வேலைகளை உருவாக்குவதன் மூலமும், அவர்கள் தொழிலாளர்களின் குறிப்பிடத்தக்க பகுதியை உள்வாங்க முடியும், பெரிய அளவிலான தொழில்கள் மற்றும் பொதுத்துறை சார்ந்திருப்பதைக் குறைக்கலாம்.

#### 2. வறுமை குறைப்பு

MSMEக்கள், அடிமட்ட அளவில் வருமானம் ஈட்டும் வாய்ப்புகளை வழங்குவதன் மூலம் வறுமை ஒழிப்பில் முக்கிய பங்கு வகிக்கின்றன. விவசாயம், கைவினைப் பொருட்கள், சில்லறை வணிகம் மற்றும் சேவைகள் ஆகியவற்றில் சிறு வணிகங்கள் ஒதுக்கப்பட்ட சமூகங்களை மேம்படுத்துவதோடு உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சியையும் ஊக்குவிக்கின்றன. MSMEகளை ஆதரிப்பதன் மூலம், இலங்கை பிராந்திய ஏற்றத்தாழ்வுகளை நிவர்த்தி செய்து, பாதிக்கப்படக்கூடிய மக்களை மேம்படுத்த முடியும்.

### 3. Driving Innovation / ஓட்டுநர் புதுமை

MSMEகள் பெரும்பாலும் படைப்பாற்றல் மற்றும் புதுமையின் மையங்களாக இருக்கின்றன. அவை புதிய யோசனைகளைக் கொண்டு வருகின்றன, வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களை ஏற்றுக்கொள்கின்றன, மேலும் சந்தை கோரிக்கைகளுக்கு விரைவாக பதிலளிக்கின்றன. தகவல் தொழில்நுட்பம், பசுமை ஆற்றல் மற்றும் மதிப்பு கூட்டப்பட்ட விவசாயம் போன்ற துறைகளில், MSMEகள் புதுமையான தயாரிப்புகள் மற்றும் சேவைகளுடன் முன்னணியில் உள்ளன. அவர்களின் சுறுசுறுப்பு அவர்களை ஒரு போட்டி மற்றும் நெகிழ்ச்சியான பொருளாதாரத்தை இயக்குவதில் முக்கிய பங்காளிகளாக நிலைநிறுத்துகின்றது.






### இலங்கையில் MSMEகள் எதிர்கொள்ளும் சவால்கள்

அவர்களின் அபரிமிதமான ஆற்றல் இருந்த போதிலும், இலங்கையில் MSMEகள் பொருளாதாரத்திற்கான அவர்களின் வளர்ச்சி மற்றும் பங்களிப்பைத் தடுக்கும் பல சவால்களை எதிர்கொள்கின்றன. இந்த தடைகளை நிவர்த்தி செய்வது அவர்களின் முழு திறனையும் திறக்க முக்கியமானது.

#### 1. நிதிக்கான வரையறுக்கப்பட்ட அணுகல்

MSME களுக்கு மிக முக்கியமான சவால்களில் ஒன்று மலிவு கடன் அணுகல் ஆகும். அதிக வட்டி விகிதங்கள், கடுமையான இணைத் தேவைகள் மற்றும் வடிவமைக்கப்பட்ட நிதி தயாரிப்புகளின் பற்றாக்குறை ஆகியவை சிறு வணிகங்கள் விரிவாக்கம் மற்றும் புதுமைக்குத் தேவையான நிதியைப் பாதுகாப்பதில் இருந்து பெரும்பாலும் தடுக்கின்றன.

#### 2. ஒழுங்குமுறை சுமைகள்

சிக்கலான மற்றும் காலாவதியான ஒழுங்குமுறை கட்டமைப்புகள் MSMEகளுக்கு ஒரு குறிப்பிடத்தக்க தடையாக உள்ளது. நீண்ட பதிவு செயல்முறைகள், அதிக இணக்கச் செலவுகள் மற்றும் சீரற்ற கொள்கைச் செயலாக்கம் ஆகியவை தொழில்முனைவோரை பலவீனப்படுத்துவதோடு வணிகச் செயல்பாடுகளைத் தடுக்கின்றன.

#### 3. சந்தை அணுகல் மற்றும் போட்டி

மட்டுப்படுத்தப்பட்ட சந்தைப்படுத்தல் வளங்கள், பிராண்டிங் இல்லாமை மற்றும் போதிய உட்கட்டமைப்பு ஆகியவற்றின் காரணமாக MSMEகள் பெரிய சந்தைகளை அணுகுவதற்குப் போராடுகின்றன. அவர்கள் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் பெரிய உள்நாட்டு நிறுவனங்களிடமிருந்து கடுமையான போட்டியை எதிர்கொள்கின்றனர், இதனால் இலாபத்தைத் தக்கவைத்துக்கொள்வது சவாலானது.

#### 4. திறன் இடைவெளிகள் மற்றும் தொழில்நுட்பத்தை ஏற்றுக்கொள்வது

நவீன நடைமுறைகள் மற்றும் தொழில்நுட்பங்களைப் பின்பற்றுவதற்குத் தேவையான தொழில்நுட்ப நிபுணத்துவம் மற்றும் திறமையான பணியாளர்கள் பல ஆளுஆநுக்களிடம் மிகக் குறைந்த அளவில் காணப்படுகின்றன. இந்த இடைவெளி அவர்களின் உற்பத்தித்திறன் மற்றும் வேகமாக வளர்ந்து வரும் உலகளாவிய சந்தையில் போட்டியிடும் திறனைக் கட்டுப்படுத்துகின்றது.

#### 5. பொருளாதார ஸ்திரமின்மையின் தாக்கம்

இலங்கையின் சமீபத்திய பொருளாதார சவால்களான பணவீக்கம், நாணய மதிப்பிழப்பு மற்றும் விநியோகச் சங்கிலிகளில் ஏற்பட்ட இடையூறுகள், MSMEகளை விகிதாசாரத்தில் பாதித்துள்ளன. பல சிறு வணிகங்கள் மிகக் குறைந்த அளவு இலாபத்துடன் இயங்குவதோடு பொருளாதார அதிர்ச்சிகளுக்கு மிகவும் பாதிக்கப்படக்கூடியவையாக காணப்படுகின்றது.

### MSMEகளை மேம்படுத்துவதற்கான கொள்கை சீர்திருத் தங்கள்

MSMEகளின் திறனை வெளிக்கொணர, அவர்களின் சவால்களை எதிர்கொள்ளும் மற்றும் வளர்ச்சிக்கான சூழலை உருவாக்கும் ஒரு விரிவான மூலோபாயம் இலங்கைக்கு தேவைப்படுகின்றது. முக்கிய கொள்கை பரிந்துரைகளில் பின்வருவன அடங்கும்:

**1. நிதிக்கான அணுகலை மேம்படுத்துதல்**

- குறைந்த வட்டி விகிதங்கள் மற்றும் நெகிழ்வான திருப்பிச் செலுத்தும் விதிமுறைகளுடன் MSME களுக்கு சிறப்பு நிதி திட்டங்களை உருவாக்குதல்.
- சிறு வணிகங்களுக்கு ஏற்ப நுண்கடன் முன்முயற்சிகளை உருவாக்க பொது-தனியார் கூட்டாண்மைகளை ஏற்படுத்துதல்.
- Venture capital, crowdfunding, and peer-to-peer lending போன்ற மாற்று நிதி விருப்பங்களை ஏற்படுத்திக் கொடுத்தல்.



**2. ஒழுங்குமுறைகளை ஒழுங்குபடுத்துதல்**

- டிஜிட்டல் தளங்கள் மூலம் வணிக பதிவு மற்றும் உரிம செயல்முறைகளை எளிதாக்கிக் கொடுத்தல்.
- இணக்கச் செலவுகளைக் குறைத்தல் மற்றும் தொடக்கங்கள் மற்றும் சிறு வணிகங்களுக்கான ஊக்கத்தொகைகளை அறிமுகப்படுத்துதல்.
- நேர்மை மற்றும் வணிகம் செய்வதை எளிதாக்குவதற்கு பிராந்தியங்கள் முழுவதும் கொள்கைகளை சீராக செயல்படுத்துவதை ஏற்படுத்துதல்.

**3. சந்தை அணுகலை வலுப்படுத்துதல்**

- MSMEகளை சர்வதேச சந்தைகளுடன் இணைக்க ஏற்றுமதி ஊக்குவிப்பு திட்டங்களை உருவாக்குதல்.
- பிராண்டிங், மார்க்கெட்டிங் மற்றும் வர்த்தக கண்காட்சிகளில் பங்கேற்பதற்கான ஆதரவை வழங்குதல்.
- சந்தை இணைப்புகளை எளிதாக்க, தள பாடங்கள் மற்றும் டிஜிட்டல் தளங்கள் போன்ற உள்கட்டமைப்புகளில் முதலீடு செய்தல்.

**4. திறன் மற்றும் திறமைகளை உருவாக்குதல்**

- தொழில் முனைவோர் திறன், நிதி அறிவு மற்றும் தொழில்நுட்ப நிபுணத்துவம் ஆகியவற்றை மேம்படுத்த இலக்கு பயிற்சி திட்டங்களை அறிமுகப்படுத்துதல்.
- திறன்-கட்டுமான முயற்சிகளை உருவாக்க கல்வி நிறுவனங்கள் மற்றும் தொழில்துறை தலைவர்களுடன் ஒத்துழைத்தல்.
- மானியங்கள் மற்றும் அறிவு-பகிர்வு தளங்கள் மூலம் டிஜிட்டல் கருவிகள் மற்றும் தொழில் நுட்பங்களை ஏற்றுக்கொள்வதை ஊக்குவித்தல்.

**5. பொருளாதார அபாயங்களைக் குறைத்தல்**

- பொருளாதார சரிவுகளின் போது வரி நிவாரணம் மற்றும் அவசர கடன் வசதிகல் போன்ற MSME களுக்கு பாதுகாப்பு வலைகளைஃ திட்டங்களை அமுல்படுத்தல்.
- ஒற்றை வருவாய் முறையில் சார்ந்திருப்பதைக் குறைக்க வணிக நடவடிக்கைகளின் பல் வகைப்படுத்தலை ஊக்குவித்தல்.
- இடர் மேலாண்மை பயிற்சி மற்றும் காப்பீட்டு தயாரிப்புகளுக்கான அணுகல் மூலம் MSME பின்னடைவை வலுப்படுத்தல்.

### MSMEகளை மேம்படுத்த தொழில்நுட்பத்தை மேம்படுத்துதல்

MSMEகளை நவீனமயமாக்குவதிலும், அவற்றின் போட்டித்தன்மையை அதிகரிப்பதிலும் தொழில்நுட்பம் ஒரு உருமாறும் பாத்திரத்தை வகிக்கின்றது. இலங்கையில், பின்வரும் பகுதிகள் ஆராயப்படலாம்:

- டிஜிட்டல் மாற்றம்: சரக்கு மேலாண்மை, வாடிக்கையாளர் உறவு மேலாண்மை (CRM) மற்றும் இ-காமர்ஸ் / (E- Commerce) ஆகியவற்றிற்கான டிஜிட்டல் கருவிகளைப் பின்பற்ற MSMEகளை ஊக்குவிப்பது செயல்திறனையும் சந்தை அணுகலையும் அதிகரிக்கும்.
- Fintech தீர்வுகள்: fintech நிறுவனங்களுடன் கூட்டு சேர்ந்து MSMEகளுக்கு மொபைல் பேங்கிங் ஃ (Mobile Banking), டிஜிட்டல் பணம் செலுத்துதல் மற்றும் AI-உந்துதல் கிரெடிட் ஸ்கோரிங் போன்ற புதுமையான நிதிச் சேவைகளை வழங்க முடியும்.
- ஈ-காமர்ஸ் வழியாக உலகளாவிய சந்தைகளுக்கான அணுகல்: அலிபாபா மற்றும் அமேசான் போன்ற தளங்கள் பாரம்பரிய தடைகளைத் தவிர்த்து, சர்வதேச நுகர்வோரை அடைய இலங்கை MSMEகளை செயல்படுத்த முடியும்.

### கிளஸ்டர் வளர்ச்சியை ஊக்குவித்தல்

குறிப்பிட்ட துறைகளில் ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட வணிகங்களின் புவியியல் செறிவுகளான கிளஸ்டர்களில் வேலை செய்வதன் மூலம் MSMEகள் குறிப்பிடத்தக்க அளவில் பயனடையலாம். இந்த அணுகுமுறை முடியும்:

- அறிவுப் பகிர்வு மற்றும் ஒத்துழைப்பை எளிதாக்குதல்.
- பகிரப்பட்ட உட்கட்டமைப்பு மற்றும் ஆதாரங்களுக்கான அணுகலை உருவாக்குதல்.
- ஆடைத்தொழில், தேயிலை உற்பத்தி அல்லது சுற்றுச்சூழல் சுற்றுலா போன்ற துறைகளின் போட்டித்தன்மையை மேம்படுத்துதல்.

### சுற்றுச்சூழல் நிலைத்தன்மை மற்றும் பசுமை நடைமுறைகள்

- MSMEகளை நிலையான நடைமுறைகளை பின்பற்ற ஊக்குவிப்பது அவர்களின் சந்தை முறையீட்டை மேம்படுத்தி உலகளாவிய போக்குகளுடன் சீரமைக்க முடியும்:
- புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மற்றும் நிலையான உற்பத்தி முறைகளைப் பின்பற்றுவதற்கான ஊக்கத்தொகைகளை அறிமுகப்படுத்துதல்.
- சர்வதேச சந்தைகளில் சூழல் நட்பு தயாரிப்புகளை ஊக்குவித்து, தரத்திற்கான இலங்கையின் நற்பெயரை உயர்த்துதல்.

### கண்காணிப்பு மற்றும் முன்னேற்றத்தை அளவிடுதல்

MSME-ஐ மையமாகக் கொண்ட கொள்கைகளின் வெற்றியை உறுதிப்படுத்த, அளவிடக் கூடிய இலக்குகள் மற்றும் வலுவான கண்காணிப்பு வழிமுறைகளை நிறுவுதல் அவசியம்:

- மொத்த உள்நாட்டு உற்பத்தி, வேலைவாய்ப்பு மற்றும் ஏற்றுமதிக்கான MSME பங்களிப்புகளின் வழக்கமான மதிப்பீடுகள்.
- கொள்கைகளை செம்மைப்படுத்தவும், வளர்ந்து வரும் சவால்களை எதிர்கொள்ளவும் MSME களிடமிருந்து கருத்துக்களை சேகரித்தல்.
- MSME வளர்ச்சி மற்றும் தாக்கம் குறித்த ஆராய்ச்சிக்காக கல்வி நிறுவனங்களுடன் ஒத்துழைத்தல்.

இலங்கையின் பொருளாதாரத்தின் புத்துயிர்ப்பு MSME களின் நீடித்த வளர்ச்சி மற்றும் வலுவூட்டலைப் பொறுத்தது. அவர்களின் சவால்களை எதிர்கொள்வதன் மூலமும், ஆதரவான கொள்கைகளை செயல்படுத்துவதன் மூலமும், MSMEகள் பொருளாதார மீட்சி மற்றும் நீண்ட கால வளர்ச்சிக்கு உந்து சக்தியாக மாற முடியும். கொள்கை வகுப்பாளர்கள், நிதி நிறுவனங்கள் மற்றும் பங்குதாரர்கள் புதுமை, உள்ளடக்கம் மற்றும் பின்னடைவை வளர்க்கும் ஒரு வளர்ப்பு சுற்றுச்சூழல் அமைப்பை உருவாக்க ஒத்துழைக்க வேண்டும்.

பொருளாதார நெருக்கடியை சமாளிக்க முயற்சிக்கும் ஒரு நாட்டில், MSMEகளின் வெற்றி ஒரு பொருளாதார கட்டாயம் மட்டுமல்ல, சமூகத் தேவையாகவும் அமைகின்றது. இந்த நிறுவனங்களை வலுவூட்டுவது இலங்கைக்கு மிகவும் சமமான, வளமான மற்றும் நிலையான எதிர்காலத்திற்கு வழி வகுக்கும்.



AGS. சுவாமிநாதன் சர்மா
MBA (UK), FCA (SL), FCMA (UK),FCPA (Aust.)
நிர்வாக இயக்குனர் @ A. G. Sarma & Co., (CA)
பட்டயக்கணக்காளர் , வரி மற்றும் முகாமைத்துவ ஆலோசகர்

மின்மடல் : tamilseconomy@gmail.com
தொலைபேசி :+94(77)2034807 +94 (77) 776 9751

## நிலத்தடிநீர் எங்கள் உயிர் நாடி

ஐக்கிய நாடுகளின் பிரகடனத்திற்கமைய 1993ம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு வருடமும் மார்ச் மாதம் 22ம் திகதி உலக நீர் தினம் கொண்டாடப் படுகிறது. பனிப்பாறைகளை பாதுகாத்தல் என்பதே இம்முறை நீர் தினத்தின் தொனிப்பொருளாகும். சுத்தமான குடிநீர் மனிதனின் அடிப்படை உரிமையாக இருப்பதுடன் உலகில் சுமார் 2.2 பில்லியனுக்கும் அதிகமானோர் சுத்தமான குடிநீரை பெறுவதில் சிக்கல்களை எதிர்கொண்டுள்ளனர்.

3 பில்லியனுக்கும் அதிகமான மக்கள் தேசிய எல்லைகள் ஊடாக பயணிக்கும் நீரேந்து பகுதிகளிலிருந்தே தமது குடிநீர் தேவைகளை பூர்த்தி செய்துகொள்வதாக ஐக்கிய நாடுகளின் தரவுகளுக்கமைய தெரியவந்துள்ளது ஆறுகள், வாவிகள், உள்ளிட்ட நீர் வளங்களை அயல்நாடு களுடன் பகிர்ந்துகொள்ளும் நாடுகளின் எண் ணிக்கை 153 ஆகும். உலக வங்கியின் எதிர்வு கூறல்களுக்கமைய 2030ம் ஆண்டளவில் கேள்வி மற்றும் தற்போதுள்ள நீர் இருப்புக்கிடையில் பரஸ்பரம் அதிகரிக்கும் வாய்ப்புள்ளது.

இலங்கையின் சனத்தொகையில் 62 வீதமானவர்களுக்கே சுத்தமான குடிநீர் கிடைக்கப் பெறுகிறது. முறையற்ற அபிவிருத்தி மற்றும் காடழிப்பு போன்ற காரணங்களினால் நீரோந்து பகுதிகள் அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகியுள்ளன. இது இலங்கை முகம்கொடுக்கும் பாரிய சவாலாகும். இதேவேளை உலக நீர் தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில்" நிலத்தடி நீர் எங்கள் உயிர் நாடி" என்கின்ற தொனிப்பொருளில் கண்காட்சி கூடம் அமைக்கப் பட்டு துளி வாசகர் சஞ்சிகை ஒன்றும் வெளியாகியிருக்கிறது.

காலம் காலமாக பேசப்பட்டு வருகின்ற யாழ்ப்பாணத்தின் நிலத்தடி நீர் மற்றும் ஏனைய வடக்கு கிழக்கு தமிழர் பிரதேசங்களில் நீர் வளங்கள் பற்றி நாங்கள் அக்கறை கொள்வோமா என்பது வருகின்ற செயல் திட்டங்களினூடுதான் கண்டறிய முடியும். எது எப்படி இருப்பிடம் நிலத்தடி நீர் நமது உயிர்நாடி என்பதை முழுதாக உணர்ந்து நாங்கள் செயல்பட வேண்டிய மிக முக்கியமான காலகட்டத்தில் நாங்கள் இருக்கிறோம் நழுவ விடுகின்ற ஒவ்வொரு மணி துளிகளும் நிச்சயமாக நிலத்தடி நீருக்கான கேள்விக்குறிகளையே உண்டாக்கும். ஒன்றுபட வேண்டும், நிலத்தடி நீரையாவது காப்பாற்றி அடுத்த சந்ததியின் கைகளில் ஒப்படைக்க வேண்டும் என்று முனைப்போடு செயல்படுவோம்.

## வன தினம்

### ஏன் கொண்டாடப்படுகிறது?



**காடுகள் நம் வாழும் பூமியின் உயிர்நாடியாகும். இது பல மில்லிய கணக்கான மக்களுக்கு ஆக்சிஜன், உணவு, மருந்து மற்றும் வாழ்வாதாரத்தை வழங்குகின்றது. அவை சுற்றுச்சூழல் முக்கியத்துவத்திற்கு அப்பால் உலக அளவில் காடுகள் பாதுகாப்பின் தூ ண்களாக கருதப்படுகிறது. காடுகள் பழங்கள் விதைகள் வேர்கள் போன்ற அத்தியாவசிய பலன்களை நமக்கு வழங்குகின்றன.**

ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 21ஆம் தேதி காடுகளைக் கொண்டாடவும், மரங்கள் மற்றும் காடுகளின் முக்கியத்துவத்தை அங்கீகரிக்கவும், அவற்றை பாதுகாக்க விழிப்புணர்வை ஏற்படுத்தவும் உலக சர்வதேச வன தினமாகக் கொண்டாடப்படுகிறது. 2012 ஆம் ஆண்டில் காடுகளின் முக்கிய பங்கு கொண்டாடவும், அவற்றை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும் ஐக்கிய நாடுகள் சபை மார்ச் 21ஆம் தேதியே சர்வதேச வன தினமாக அறிவித்தது.

மரங்கள் அடர்ந்த நிலப்பகுதி காடு அல்லது வனம் என்று அழைக்கப்படுகிறது. பருவம் தப்பாத காலநிலை பெரும்பாலும் சீராக இருப்பதற்கு காடுகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. உலகின் பல பகுதிகளிலுமுள்ள காடுகள் காற்றிலுள்ள கரியமில வாயுவை உட்கொள்கின்றன, விலங்குகளுக்கு புகலிடமாக விளங்குகின்றன, வெள்ளப்பெருக்கைக் கட்டுப்படுத்துகின்றன, மண் அரிப்பைத் தடுக்கின்றன.

உலக நிலப்பரப்பில் 30 சதவீதம் காடுகள் உள்ளன. இதில் 60 ஆயிரம் வகை தாவரங்கள் உள்ளன. நிழல், இலை, காய், கனி, மணம், குணம், பானம், மழை, குளுமை, தூய்மை, எண்ணெய், உறைவிடம், விறகு என மனித சமுதாயத்துக்கு பல வழிகளும்

தாவரங்கள் நன்மை தருகின்றன. வெப்பமண்டலக் காடுகள் உலகில் வாழும் 50மூ உயிரினங்களுக்கு உறைவிடமாக விளங்குகின்றன. நம் இந்தியாவில் சுமார் 24மூ காடுகள் மற்றும் மரங்களால் சூழப்பட்டிருக்கிறது. சுமார் 2.2 கோடி பேர் வன நிர்வாகத்தில் பங்கேற்றுள்ளார்கள். சுமார் 100 தேசிய பூங்காக்கள், 515 வன விலங்கு சரணாயலங்கள் இருக்கின்றன.

மனிதன் இன்று சந்திக்கின்ற நெருக்கடியான பிரச்சனை புவி வெப்பமடைதலால் ஏற்படும் பல்வேறு அழிவுகள். முக்கியமாக காடுகளை அழிப்பதை நிறுத்துவது மற்றும் புதிதாக அதிக மரங்களை வளர்ப்பது மூலம்தான் புவி வெப்பம் அடைதலை தடுக்க முடியும். வனம் என்பது காட்டு விலங்குகளுக்கு உரியது. அங்குள்ள மரங்களை நாம் வெட்டி விடுவதால் மழை குறைந்துவிடுகிறது. இதனால், விலங்குகள் உணவு மற்றும் தண்ணீருக்காக நாட்டுக்குள் நுழைந்து விடுகின்றன.

எனவே மரங்களைப் பாதுகாப்பதன் முக்கியத்துவம் அறிவோம். மரங்கள் தட்பவெப்ப நிலையை தணிக்கும் தன்மை கொண்டது. நகரங்களில் இருக்கும் மரங்கள் காற்று மாசுபாட்டை குறைக்கும். மேலும் இரைச்சல் அதிகமாக இருக்கும் இடங்களில் மரங்கள் இரைச்சலை குறைக்கும் தன்மை கொண்டது. அதிக மரங்களை நகரங்களில் நடுவதன் மூலம் பசுமை நகரங்களாக மாற்றலாம். அதிக தண்ணீர் புலக்கத்திற்கும் நிலத்தடி நீரை சுத்திகரிக்கவும் இயலும். இவ்வாறு மரங்களின் முக்கியத்துவத்தை நாம் அடுத்த தலைமுறைக்கு உணர்த்துவதன் மூலமே பூமியை வாழும் இடமாக மாற்ற இயலும்.

நாம் பயன்படுத்தும் புத்தகம் கட்டும் வீடு உள்ளிட்ட அனைத்து பொருட்களும் மரங்கள் இல்லாமல் இல்லை. ஆனால் இன்றைய காலகட்டத்தில் பருவநிலை மாற்றம் காடுகள் அழிப்பு போன்றவற்றால் காடுகளை கொஞ்சம் கொஞ்சமாக இழந்து வருகிறோம். எனவே அவற்றின் முக்கியத்துவத்தை நம் அனைவரும் புரிந்து கொள்ள வேண்டியது மிகவும் அவசியம். காடுகள் புவியியல் வாழ்வை எவ்வாறு சமநிலைப்படுத்த உதவுகின்றன என்பதையும் நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

ஒவ்வொரு ஆண்டும் ஒரு புதிய கருப்பொருளில் சர்வதேச பல தினம் கொண்டாடப்படும் அந்த வகையில் இந்த ஆண்டுக்கான கருப்பொருள் ‘காடுகள் மற்றும் உணவு’. காடுகளுக்கும் உலகளாவிய உணவு பாதுகாப்பிற்கும் இடையிலான ஆழமான தொடர்பை வலியுறுத்துகிறது என்பதுதான் இதன் அர்த்தம்.

காடுகள் பல நன்மைகளை நமக்கு வழங்குகிறது என்பதால் இந்த நாளில் மட்டும் அவற்றை குறித்து நாம் பேசக்கூடாது எல்லா நாளிலும் அவற்றை குறித்து பேச வேண்டும். குறிப்பாக எதிர்கால சந்ததியினருக்கு முக்கிய வழங்கலான காடுகளை பாதுகாப்பதற்கான நமது அர்ப்பணிப்பை மீண்டும் உறுதிப்படுத்த வேண்டும். பாதுகாப்பு முயற்சிகள் சமூக அர்ப்பணிப்பு மற்றும் நிலையான கொள்கைகளுடன் ஒருங்கியது பசுமையான ஆரோக்கியமான மற்றும் வளமான எதிர்காலத்திற்கு காடுகள் நாம் பாதுகாப்போம்!!



பூரணி



# நடுத்தர மற்றும் சுய தொழில் முயற்சிகள்



இன்றைய காலகட்டத்தில் தனிமனித வருமானம் குடும்ப வாழ்வாதாரம் போன்றன மாதாந்த பொருளாதாரத்தில் செல்வாக்கு செலுத்துவது மட்டும் அல்லாமல் ஒரு நாட்டின் மொத்த தேசிய வருமானத்திலும் பெருமளவு செல்வாக்குச் செலுத்துகின்றது. அவ்வகையில் நடுத்தர மற்றும் சுய தொழில் முயற்சிகள் இலங்கை பொருளா தாரத்தின் ஒட்டுமொத்த கொள்கை நோக்கங்களில் ஒரு முக்கியமான தந்திரோபாய அம்சமாக அடையாளங் காணப்பட்டிருக்கின்ற அதே வேளை இது பொருளாதார வளர்ச்சி, பிராந்திய அபிவிருத்தி, வேலைவாய்ப்பு உருவாக்கம் மற்றும் வறுமைக்கான வலுவூட்டல் தொடர்பிலான மாற்றத்துக்கான ஒரு உந்துசக்தியாகவும் இருக்கின்றது.

இவ்வாறான சுய தொழில் முயற்சிகள் துறையானது பின்தங்கிய கிராமங்களை விருத்தி செய்யக்கூடியளவிலான பங்களிப்பினை வழங்கக் கூடிய ஒரு முயற்சியாகவே கருதப்படுகின்றது. இச்சிறிய நடுத்தர தொழில்முயற்சிகள் முதலீடு செய்வதற்கும், பின்தங்கிய மற்றும் விருத்தி அடைந்த நோக்கி பிரதேசங்களுக்கு இடையிலான இடைவெளியினைக் குறைப்பதற்கான தூண்டு தலாகவும் விளங்குகின்றமையால் இது நாட்டின் பொருளாதார மேம்பாட்டிற்கான ஒரு நல்ல அடித் தளமாகவும் விளங்குகின்றது. அந்த வகையில் உள்ளூர் வளங்களை பயன்படுத்துவதன் மூலம் மனிதனுடைய தேவையைகளைபூர்த்தி செய் வதற்கு மனித முயற்சியில்மேற்கொள்ளப்படும்பொருளாதார முயற்சி கைத்தொழில் என்று கூறலாம். முன்னைய காலத்தில் விவசாயத்தை மையமாக கொண்டு விளங்கிய பொருளா தாரம் இன்று சுய கைத்தொழில் முயற்சிகளுக்கு கூடிய முக்கியத்தினை கொடுக்கின்றன.

இன்றைய காலகட்டத்தில் இலங்கையில் முக்கியத்துவம் பெறுகின்ற உள்ளூர் கைத்தொழில் களாக தும்புக் கைத்தொழில், சீமெந்துக் கைத்தொழில், சீனிக்கைத்தொழில், ஆடைக்கைத்தொழில், இறப்பர் பிளாஸ்டிக் சார் கைத்தொழில், பாரம்பரிய கைப்பணி கைத்தொழில் என்பவற்றைக் குறிப்பிட முடியும். அதிலும் முக்கியமாக தும்புக் கைத்தொழில் செய்கையானது முக்கியமான ஒரு கைத்தொழிலாக காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. ஆரம்ப காலத்தில் இருந்து உபகரணங்கள் இல்லாது கையினாலேயே தும்புசார் அனைத்து உற்பத்தி களையும் செய்து சந்தைப்படுத்தி வந்துள்ளனர். இப்போதும் இவ்வாறான பாரம்பரிய முறை நடைமுறையில் இருந்து





வருகின்ற போதிலும் பெருமளவில் உபகரணங்களின் உதவியின் மூலம் தும்புக் கைத்தொழிலை மேற்கொள்ளுமளவிற்கு முன்னேற்றம் அடைந்துள்ளது.



தும்புக் கைத்தொழில் முயற்சிகளுக்கான முறையான பயிற்சி நிலையங்கள் மற்றும் முறையான பயிற்சி முறைகள் மிகவும் அரிதாகவே காணப்படுகின்றன. பெரும்பாலும் பரம்பரை பரம்பரையாக தொழில்சார் அனுபவங்களையும் யுக்திகளையும் தலைமுறைகளிற்கிடையில் கடத்து வதாகவே பரவலாக காணப்படுகிறது. எனினும் இன்றளவில் தும்பு கைத்தொழிலிற்கான கேள்வி அதிகரித்து வருகின்ற வகையில் பலர் இதில் நாட்டம் செலுத்த ஆரம்பித்துள்ளனர். அந்த வகையில் தும்புத் தொழில் என்பது தென்னந் தும்பை பிரதான மூலப் பொருளாகப் பயன்படுத்தி பல்வேறு யுக்திகளின் மூலம் ஆக்க பூர்வமானதாக மேற்கொள்ளப்படும் கைத்தொழில் ஆகும். தேங்காய் மட்டை அல்லது உரிமட்டைகளை பதப்படுத்துவதன் மூலம் தென்னந் தும்பைப் பெற்று அதில் இருந்து தும்பைப் பயன்படுத்தி பல பயன்பாடுகள் மிக்க முடிவுப் பொருட்களை உற்பத்தி செய்தல் வரையிலான செயற்பாடுகளை தும்புத் தொழில் என்பதற்குள் குறிப்பிட முடியும்.

தேங்காய்களில் இருந்து அதன் மட்டைகள் அகற்றப்படுதல், மட்டைகளில் தும்பை வேறுபடுத்தி அவற்றை பதப்படுத்தி அத்தும்பை பயன்படுத்தி, தும்புத்தடி, கயிறு மற்றும் கால்மிதி ஆகிய பொருட்களின் உற்பத்திகளை செய்து அதனை விற்பனை செய்யும் செயற்பாடுகள் போன்றன தும்பு தொழிலின் செயற்பாடுகளாய் அமைகிறது. தேங்காய்கள் விற்பனை செய்யப்படும் நோக்கோடு தென்னம் தோட்டங்களில் தேங்காய்கள் பெறப்பட்டு சந்தைக்கு கொண்டு செல்லப்படும். சந்தையில் தேங்காய்களில் உள்ள மட்டைகள், அலவாங்கு போன்ற ஆயுதத்தைக் கொண்டு தேங்காயில் இருந்து அகற்றப்படும். இச்செயற்பாடு "தேங்காய் உரித்தல்" என கூறப்படும். பின்னர் தேங்காய்கள் விற்பனைக்கு கொண்டு செல்லப்படும். தேங்காயில் இருந்து அகற்றப்படும் உரிமட்டைகள் பிறிதாக சேகரிக்கப்படும்.

உரிமட்டைகள் சேகரிக்கப்பட்ட பின்னர் அதனை தும்புத் தொழில் மேற்கொள்பவர்களின் பிரயோகத்திற்காக தொழில்முனைவோரால் கொள்வனவு செய்யப்பட்டு அவற்றை உவர்ப்புத் தன்மை கொண்ட நீர் நிலைகளுக்கு அருகாமையில் கொண்டு சேகரிக்கப்படும். மட்டைகளை வாங்கிய தொழில் முனைவோர் நீர் நிலைகளின் கரைகளில் தேங்காய் மட்டைகளை புதைத்து விடுவார்கள். புதைக்கப்பட்ட மட்டைகள் நீர் நிலைகளின் கரைகளில் 6 மாதம் முதல் 1 வருடம் வரை ஈரப்பதன் உள்ள நிலத்தின் அடியில் ஊறவிடப்படும். குறித்த மட்டைகள் 6 மாதம் தொடக்கம் 1 வருடம் வரை குறிப்பிட்ட பதத்தை அடைந்ததன் பின்னர். உரிமட்டைகளை மீண்டும் தோண்டி எடுத்து அவற்றை ஒவ்வொரு மட்டைகளாக பிரித்து எடுப்பார்கள்.

எல்லா மட்டைகளிலும் உள்ள தோலையும் தும்பையும் கையால் பிரித்து எடுப்பார்கள். தும்பில் இருந்து பிரித்தெடுக்கப்படும் தோல் வீடுகளில் பூ மரங்கள் வளர்க்கும் போது பசளைகளாக பயன்படுத்தல் போன்ற தேவைகளிற்காக விற்பனை செய்யப்படும். அதன் பின்னர் தும்பில் ஊறிக் கணப்படும் நீரை புளிந்து வெளியேற்றியபின் தும்பை மரக்கட்டை அல்லது சீமெந்து கொங்கிறீற்றுக் கட்டி ஒன்றில் வைத்து இரும்பு பொல் ஒன்றால் தட்டி அடித்து பதப்படுத்துவார்கள். இதனை அவர்கள் மட்டை தட்டல் என அழைப்பார்கள். இந்த செயற்பாடு சில இடங்களில் இயந்திரங்களைக் கொண்டும் செய்யப்படுகின்றது.

மட்டை தட்டிப் பதப்படுத்தி பெறப்படும் தும்பை உலரவிட்டு அடுத்த கட்ட உற்பத்திக்கான ஆயத்த தும்பாக மாற்றி அவற்றை சேகரித்து எடுப்பார்கள். இவ்வாறே தும்பு உற்பத்தி செய்முறை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இன்றைய காலகட்டத்தில் இயற்கை உற்பத்திப் பொருட்களுக்கான கேள்வி அதிகரித்தும் நிலையில் தாவர மூலப்பொருளான தும்பு மற்றும் தும்பிலிருந்து பெறப்படும் உற்பத்திப் பொருட்கள் மீதான கேள்வியும் அதிகரித்து வருகிறது. இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் தும்பானது தடித்த, நீளமான, தூய்மையான இழைகளைக் கொண்டிருப்பதாக

உலக தும்புச் சந்தையில் கருதப்படுகிறது. இத்தும்பானது பெருமளவு மரபார்ந்த தும்புக் கைத்தொழில் நுட்பங்களைப் பின்பற்றியே உற்பத்தி செய்யப்படுகிறது.

இன்று கயிற்றிற்கான கேள்வி அதிகரித்து வருவது நாம் அறிந்த விடயமே. அந்த வகையில் தும்பு உற்பத்திப் பொருட்களில் முதன்மையாக விளங்குவது தும்பிலிருந்து திரிக்கப்பட்ட பலவகையான கயிறுகளேயாகும். இலங்கையின் தும்புத் தொழிற்துறையானது ஏறத்தாழ 35,000 தொழிலாளர்களைக் கொண்டுள்ளது. இதில் ஏறத்தாழ 75-90% பெண்களாகவே உள்ளவர். கைத்தொழில் துறையில் பெண்களின் ஈடுபாடு இலங்கையில் அதிகமாக காணப்படுகிறது.

இதற்கு குளம், மடு,வாவி, குட்டை போன்ற நீர் நிலைகள் தும்புத் தொழிலின் முக்கிய செயற்பாடுகளான மட்டை புதைத்தல், தட்டல் போன்றவற்றுக்குத் தேவையான இயற்கைச் சூழலமைவையும் கொண்டுள்ளமை சிறப்பான விடயமே. கிராமிய சிறு குடிசைக் கைத்தொழில் திணைக்களத்தின் மூலம் கயிற்று திரிக்கும் தொழிற்பயிற்சிகள் வழங்கப்பட்டன. நெல் அறுவடை இயந்திரத்தின் அறிமுகத்திற்கு முன்னதான காலப்பகுதியில் நெல் அறுவடைக்குப் பயன்பட்ட கயிறுகளான உப்பட்டிக் கயிறு, வரிச்சிக் கயிறு, தேடாக்கயிறு போன்றன தும்பிலிருந்து தயாரித்து விற்பனை செய்யப்படுகிறன.





தும்பளையானது இலங்கையின் வடக்கு பகுதியிலுள்ள பருத்தித்துறைக்கு அண்மையில் ஒரு கிராமம் ஆகும். தும்பளை என்னும் பெயர் “தும்பு, அளை” என்பதிலிருந்து மருவி வந்திருக்க வேண்டும் எனும் கருத்துமுண்டு. அளை என்பது வாய்க்கால் அல்லது ஓடையைக் குறிக்கும் சொல்லாகும். பண்டைய காலத்தில் தும்புக் கைத்தொழிலே இக்கிராமத்தின் முதன்மைப் பொருளாதார நடவடிக்கையாக இருந்திருக்கலாமென சில ஆய்வாளர்கள் கருதுகின்றனர். தேங்காய் மட்டைகளிலிருந்து தும்பைப் பெறுவதற்கு அவற்றை நீரில் சில காலம் ஊற வைக்க வேண்டும். இதற்காக சிறு ஓடைகளை வெட்டி, நீர் பாய்ச்சி அதனுள் மட்டைகளைப் புதைத்து வைப்பது வழக்கமாகும்.

அது மட்டுமல்லாது மருதமுனையிலுள்ள பிரான்ஸ்சிற்றி என்னும் பிரதேசத்தில் சிறியளவிலான தும்புத் தொழிற்சாலை ஒன்று அமைக்கப்பட்டு தும்புப் பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. இத்தொழிற்சாலையில் சுமார் 30 தொழிலாளர்கள் பணிபுரிகின்றனர். அத்தோடு இலங்கையின் வடபகுதியில் அமைந்துள்ள வல்வெட்டித்துறை ஒரு முக்கிய துறைமுக, கப்பல்



கட்டும் நகராக இருந்தமையால் இங்கே தும்பு மற்றும் கயிறு திரிக்கும் கைத்தொழில் ஒரு முக்கிய கைத்தொழிலாக பல நூற்றாண்டு காலமாக இருந்து வந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

மேலும் கச்சாய் தும்பு உற்பத்தி நிலையம், அல்லாரை தும்பு கைத்தொழில் உற்பத்தி நிலையம் கொழும்புத்துறை, பளை, முல்லைத்தீவு, வடமேல் மாகாணம், விருதோடை, கொகோ லங்கா தும்புக் கைத்தொழில் அமைப்பு, புத்தளம் போன்ற இடங்களிலும் தும்பு கைத்தொழில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அங்குள்ள அநேகமான மக்களின் ஜீவநோபாய தொழிலாக தும்புக் கைத்தொழில் காணப்படுவதும் குறிப்பிடத் தக்க ஒரு விடயமே.

நாம் தினமும் எத்தனையோ விதமான பொருட்களை நுகர்கின்றோம். அதில் பல வெளி நாடுகளில் இருந்து எமது பிரதேசத்திற்கு இறக்குமதி செய்து விற்பனை செய்யப்படுகின்றன. ஆனால் அப்பொருட்களை விட மிகவும் சிறந்த பொருட்கள் எம் தேசத்து முயற்சியாளர்களால் உருவாக்கப்படுகின்றன. உலகளாவிய ரீதியில் முண்ணனி வகிக்கும் வெளிநாட்டு வெற்றியாளர்களையும், முயற்சியாளர்களையும் ஆச்சரியத்தோடு பாராட்டுகின்றோம் . ஆனால் கடுமையான அனுபவங்களை வெற்றிக்குரிய படியாகக் கொண்டு முன்னேறிய எத்தனையோ முயற்சியாளர்கள் எம் பிரதேசத்தில் உள்ளனர் என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியம்.

இவர்கள் திறமைசாலிகளாகவும் தாம் எடுத்துக்கொண்ட முயற்சிகளில் இருந்து விலகாதவர்களாகவும், எமது தேசத்தின் வளங்களைக் கொண்டு நாம் நுகரும் பொருட்கள் உற்பத்தி செய்து சமூக நன்மை ஏற்படுத்துவதை நோக்கமாகக்





கொண்ட இவர்களது முயற்சியானது நாம் அனைவராலும் பாராட்ட வேண்டியது அவசியமே. தும்புக் கைத்தொழிலுக்கென்று எமது சந்தையில் நிலவும் கேள்விக்கேற்ப அவை அபிவிருத்தி செய்யப்படவேண்டும். அக்கைத்தொழிலில் ஈடுபட்டுவருபவர்களுக்கும் ஆர்வமுள்ளவர் களுக்கும் பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும்.

இவ்வாறு பயிற்சிகள் வழங்கப்படும்போது ஏனையவர்களுக்கும் ஈடுபடக்கூடிய வாய்ப்பும் ஆர்வமும் ஏற்படும் அதன்போது தும்புக் கைத்தொழிலும் விருத்தியடையும். எமது நாட்டில் பல தொழில் பயிற்சி நிலையங்களில் பல வகையான தொழிற் பயிற்சிகள் வழங்கப்பட்டுவரும் வேளையில் எமது கிராமத்தில் எமது வீட்டிலிருந்தவாறே செய்யக்கூடிய ஒரு தொழிலான தும்புக்கைத்தொழிலை பயிற்சி நெறியில் சேர்த்துக்கொண்டால் பாரிய ஒரு ஊக்கமாக அமையும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. மேலும் சந்தைப்படுத்தல் முயற்சிகளில் கூடிய கவனம் எடுப்பதன் மூலம் இதற்கான கேள்வியை அதிகரித்துக் கொள்ள முடியும். அந்த வகையில், இலத்திரனியல் மயமான முறையில் இதற்கான வாய்ப்புகளை உருவாக்கிக் கொள்ள முடியும்.

தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் உலகளாவிய ரீதியில் அதீத மாற்றங்களைக் கொண்டுவந்துள்ளது . சிறுவர் முதல் முதியோர் வரையிலும் , தனி மனிதன் முதல் பாரிய நிறுவனங்கள் வரையிலும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் பாவனை வியாபித்துள்ளது. சிறிய மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தினை தமது வியாபார நடவடிக்கைகளை பன்னாட்டு நாடுகளிலும் விருத்தி செய்வதற்குப் பயன்படுத்திக் கொள்ளலாம். அதன் மூலம் பல விற்பனை வாய்ப்புக்களையும் வளங்களையும் ஏற்படுத்திக் கொள்ள முடியும்

பூரணி

# மருதம் பசுமை நகர்

## Marutham Green City

**வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்**




A – 2 பரப்பு மேட்டுக்காணியுடன்
2 பரப்பு வயல்க்காணி

B – 2 பரப்பு மேட்டுக்காணியும்
2 பரப்பு வயல்க்காணியும் (தனிதனியாக)

C – 2 பரப்பு மேட்டுக்காணி
பிரதான வீதியுடன்

நல்லூர் ஆலயம் 9km
கச்சேரி 8km
யாழ் பேருந்து நிலையம் 11km
யாழ் புகையிரதநிலையம் 10km
வடக்கு மாகாணசபை 9km

## உள்ளக வசதிகள்

- நூலகம்
- நீச்சல் தடாகம்
- உணவகம்
- சிறுவர் பூங்கா
- விளையாட்டுத்திடல்
- மீன்பிடி குளம்

**0777 43 55 57**